1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கான முதல்நிலை ஆய்வுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. டி. கணபதி : இந்த குடமுடையாற்று அணைப் பகுதியின் பரப்பளவு எவ்வளவு? தனிப்பட்ட நபர்கள் அரசு நிலத்தில் எவ்வளவு பரப்பைக் கைப்பற்றியுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு சுமார் 89 லட்சம் ரூபாயாகும். 8,053 ஏக்கர்களில் பாசன வசதி உறுதிப்படுத்தத் திட்டமிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகுதான் இறுதியான முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. கணபதி : தனிப்பட்ட நபர்களின் நிலம் பாதிக்கப்படுவதால் இந்தத் திட்டம் காலங்கடத்தப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிப்பட்டவர்கள் நிலம் பாதிக்கப்படுகிறதா என்ற விவரங்கள் இல்லை. அப்படிப் பாதிக்கப்பட்டிருந்தாலும் பொது நன்மைக்காக இருந்தால் நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* 566 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the stage of the construction of diversion dam at Alathuraiyar for the diversion of water to the Hanuman River in Nanguneri Taluk?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆலத்துறையாற்றின் குறுக்கே ஒரு திருப்பு அணை கட்டும் வேலை இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆலத்துறையாற்றில் கிடைக்கும் நீரின் அளவுகளைக் கணித்த பிறகுதான் இத் திட்டம் வகுக்கப்படும்.

திரு. டி. கணபதி : தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள பழையாறு, அறுத்தலையாறு ஒரே இடத்தில் இருப்பதால் குமரி மாவட்டத்தில் மழை காலத்திலும், மாரி காலத்திலும் அதில் வருகிற ஏராளமான தண்ணீர் வீணாகிக் கடலில் கலந்து விடுவதால், அந்தத் தண்ணீர் வரண்ட பிரதேசமான இராதாபுரம் தாலூகாவுக்கு திருப்பு அணை கட்டி திருப்பி விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திருப்பு அணை கட்டுவதற்கு ரூ. 14 லட்சம் அளவில் திட்டம் போடப்பட்டது. இத் திட்டத்திற்கு நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் தந்து இருக்கிறார். ஆனால், குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் தரவில்லை. அரசாங்கம் இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் கூட்டாகச் சென்று அந்த இடத்தைப் பார்வை இட்டு ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இரண்டு பேரும் கூட்டாகச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். பொதுப் பணித்துறை பொறியாளர் தண்ணீரின் அளவைக் கணக்கிட்டு பிறகு அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஆலையாற்றிலிருந்து எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று கன்னியாகுமரி ஜில்லா கலெக்டரிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது எழுத்து மூலம் அறிக்கை வந்து இருக்கிறதா? அப்படி அறிக்கை வந்திருந்தால் அதன் விவரம் என்ன என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விவரம் என்னிடத்தில் இல்லை. இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கூட்டாகச் சேர்ந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு அறிக்கை சமர்பிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் பார்வையிட்டு, பிறகு பொறியாளரின் ஆலோசனையின் பேரில் தண்ணீர் அளவைக் கணக்கிட்டு, பிறகு, தக்க முடிவு எடுக்கப் படும்.

MR. DEPUTY SPEAKER : Question hour is extended with the leave of the House.

Delawayicheruvu Dam in Hosur Taluk

*567 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether final orders for the construction of "Dalawayicheruvu Dam in Hosur Taluk (Sulagiri Block) have been issued; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. இறுதி உத்திரவு இன்னும் பிறப்பிக்கப் படவில்லை.

(இ) இத் திட்டத்திற்கு ரூபாய் 4.65 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத் திட்டத்தை நிறைவேற்றினால் 197.06 ஏக்கர் புஞ்செய் நிலங்களை நன்செய் சாகுபடிக்கு மாற்றலாம். இதனால் எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 143.24 டன்கள் ஆகும். ஒரு டன் கூடுதல் உணவு உற்பத்தி செய்ய ரூபாய் 3,246 ஆகிறது. இந்தச் செலவானது தருமபுரி மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வரம்புத் தொகையான ரூபாய் 3,500-க்குட்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sulagiri block is backward and neglected for centuries. The Hon. Minister for Public Works was pleased to say that he would appoint even engineers to repair all the tanks. Therefore may I request the Hon. Minister to bestow special attention to this and issue orders at an early date?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரால் சிபார்சு செய்யப்பட்டு, நிதித்துறையின் பரிசீலனையில் இருக்கிறது. நிதித்துறையின் பரிசீலனை முடிந்த பிறகு உத்தரவு பிறப்பிக்கப்படும்.